தங்கம் ரீட்டெய்ல் வர்த்தகத்தில் டிஜிட்டல் முதலீடு

நேர்மையான வர்த்தக நெறிகள்

சுய மதிப்பீட்டுக்கு வழிகாட்டி

Swarna Adarsh Abhiyaan

An industry initiative

ரீட்டெய்ல் கோல்டு இன்வெஸ்ட்மென்ட் பிரின்ஸிபல்ஸ்
அடிப்படையில் உருவாக்கப்பட்டது

Supported by

WORLD GOLD COUNCIL

www.swarnaadarsh.com

Overview
Gold
₹53,756.12
1000gm
Buy Gold
Sell Gold
Cash
Transfer Cash

தங்கம் ரீட்டெய்ல் வர்த்தகத்தில் டிஜிட்டல் முதலீடு செய்வதற்கான ஆழமான வழிகாட்டிக்கு உங்களை வரவேற்கிறோம்.



பாகம் ஒன்று - ரீட்டெய்ல் கோல்டு இன்வெஸ்ட்மென்ட் கோட்பாடுகளில் விவரிக்கப்பட்டுள்ள மிகச்சிறந்த நடைமுறைகளைப் புரிந்து கொண்டு பின்பற்றுவதற்கு இந்த நேர்மையான வர்த்தக நெறிகளின் வழிகாட்டி உங்களுக்கு உதவியாக இருக்கும்.

பாகம் இரண்டு - மேம்படுத்த வேண்டிய பகுதிகள் எவை என்பதை நீங்கள் புரிந்து கொள்வதற்காக விரிவான வினாக்கள் மூலமாக இந்த சுய மதிப்பீட்டு வழிகாட்டி உதவும்.

இந்த வழிகாட்டியை உதவியாகக் கொண்டு நீங்கள் தங்கம் தொழிலில் புதிய தரங்களை உண்டாக்குவதற்காக பெருமைமிகு பயணம் ஒன்றைத் தொடங்குவீர்கள் என்று நம்புகிறோம்.

உள்ளடக்கம்

நேர்மையான வர்த்தக நெறிகள்: அறிமுகம் மற்றும் கட்டமைப்பு ... 07

வாய்ப்புக்களும், குறிக்கோள்களும் ... 08

இந்தியாவின் தங்கச் சந்தை - நேர்மையான வர்த்தக நெறிகள்-புல்லியன் டிரேடிங் ... 11

ரீட்டெய்ல் கோல்டு இன்வெஸ்ட்மெண்ட் கோட்பாடுகளுடன் இணைப்பு ... 14

நெறிகளின்படி செயல்படுவதற்கான வழிகாட்டி ... 17

- **வாங்குதல்** ... 18
- **மார்க்கெட்டிங்** ... 19
- **விற்பனை** ... 21
- **சேர்த்து வைத்தல் மற்றும் டெலிவரி** ... 22
- **வாடிக்கையாளர் சேவை மற்றும் குறை தீர்ப்பு** ... 23
- **பேமெண்ட்ஸ்** ... 24
- **இடர்களைக் கட்டுப்படுத்துதல்**
- **தணிக்கை மற்றும் சட்டவிதிகளைப் பின்பற்றுதல்** ... 29

நேர்மையான வர்த்தக நெறிகளைப் பரப்புதல் மற்றும் பின்பற்றுதல் ... 30

விளக்கம்

இணைப்பு அ: சுய மதிப்பீட்டுக்கான வழிகாட்டி ... 32

- **சுயமதிப்பீட்டுக்கான வழிகாட்டிக்கு அறிமுகம்** ... 33
- **விரிவான மதிப்பீட்டு வழிகாட்டி** ... 34
- **மதிப்பீட்டின் சுருக்கம்** ... 59

இணைப்பு-ஆ: வெர்ஷன் கட்டுப்பாடு ... 61

குறிப்புகள் ... 62


Overview
Gold
₹53,756.12
Buy Gold
Sell Gold
Cash
Transfer Cash

நேர்மையான வர்த்தக நெறிகள் அறிமுகம் மற்றும் கட்டமைப்பு

தங்கம் ரீட்டெய்ல் வர்த்தகத்தில் டிஜிட்டல் முதலீடு செய்வதற்காக உயரிய நிலையில் வழிகாட்டுவது இந்த நேர்மையான வர்த்தக நெறிகள் ஆவணத்தின் நோக்கமாகும். எல்லா வேலைகளையும் நேர்மையான முறையில் செய்வதும், கூடுதலான நடத்தை விதிகளைப் பின்பற்றுவதும், ரீட்டெய்லிங் செய்வதற்கான விதிகளைச் செயல்படுத்துவதற்கு வழிகாட்டுவதும் இந்த நேர்மையான வர்த்தக நெறிகளில் அடங்கும்.

வலுவான நடைமுறைகள் என்பதில் குறைந்தபட்ச தேவைகள் அடங்கும். இவற்றை எந்த ஒரு புரொவைடரும், அவர்களின் வியாபார அளவும், தன்மையும் எந்த அளவுக்கு இருந்தாலும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

இதை விட உயரிய தரங்களைப் பின்பற்ற விரும்பும் பெரிய /பக்குவமான விற்பனையாளருக்காக கூடுதல் நேர்மையான நடத்தை விதிகள் உள்ளன.

ஒரு நிறுவனத்தில் பயன்படுத்த வேண்டிய வலுவான நடைமுறைகள்/ கூடுதல் சிறந்த நடைமுறைகளை இந்த செயல்படுத்துவதற்கான வழிகாட்டி வழங்குகிறது. இது வழிகாட்டும் தன்மை கொண்டது. விரிவானது அல்ல. இவற்றை நடைமுறைக்கு ஏற்ப பயன்படுத்திட ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஏற்ப விரிவான வழிகாட்டுதல் தேவை.

வாய்ப்புக்களும் குறிக்கோள்களும்

உலக தங்க கவுன்சில் 2020 ஆகஸ்ட் மாதத்தில் உலகளாவிய தங்க முதலீட்டு கோட்பாடுகளை (ஆர்ஜிஜபி) வெளியிட்டது. இந்தக் கோட்பாடுகள் மார்க்கெட்டில் உள்ள வணிகர்கள் உயரிய தரங்களைப் பின்பற்றும்படி செய்வதற்கும், சில்லறை முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கும் உருவாக்கப்பட்டுள்ளன. அதிக நம்பிக்கை ஏற்படுமானால், அதனால் வாடிக்கையாளர்கள் மட்டுமல்ல, வணிகர்களும் பயனடைவார்கள். மதிப்புக் கூடி, தங்கத்திற்கான டிமாண்டும் அதிகரிக்கும்.

குளோபல் ரீட்டெய்ல் கோல்டு இன்வெஸ்ட்மென்ட் பிரின்ஸிபல்ஸ்



நேர்மை மற்றும் ஒருமைப்பாடு

வெளிப்படைத்தன்மை



வாடிக்கையாளர் சொத்துக்களின் பாதுகாப்பு

பொறுப்பான தங்க ஆதார தேடல்

ஒழுங்குமுறை இணக்கம்

வணிகம் சார்ந்த விவேகம்

செயல்படும் தொழில்முறை

இந்தியாவில் **தங்கம்** மிகவும் மகத்துவம் வாய்ந்த சொத்தாக இருக்கிறது. ஆண்டு தோறும் ~ **800-900 டன்**[1] தங்கத்திற்கு டிமாண்ட் இருப்பதால் இன்றைக்கு உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய தங்கம் பயன்படுத்தும் நாடாக நமது நாடு திகழ்கிறது. இந்தியாவில் தங்கத்திற்கு ஈடிணையற்ற ஓர் இடம் தரப்பட்டுள்ளது. அது கலாச்சார ரீதியிலும், **சமூக**[2] நிலையிலும் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுள்ளது. மேலும், மிக முக்கியமான **சேமிப்புச் சொத்தாகவும்**[3] அது கருதப்படுகிறது. பெரும்பாலும் **நகைகள்**[4] வடிவில்தான் தங்கம் நமது நாட்டில் பயன்படுத்தப்படுகிறது. தங்கக் கட்டிகளையும், நாணயங்களையும் வாங்கி மக்கள் முதலீடு செய்கிறார்கள்.

இந்திய மக்கள் தங்கத்தை அளவுகடந்து நேசிக்கிறார்கள். ஆனால் தங்கத்தில் முதலீடு செய்ய விரும்பும் தனிநபர்களுக்கு அதனுடைய வெளிப்படையாகத் தெரிவிக்கப்படாத விலை மற்றும் தரத்திற்கு உத்தரவாதம் தொடர்பாக பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. தங்கம் விற்கும் சந்தை அமைப்பு வலு இல்லாமல் சிதறிக் கிடக்கிறது. அதை மேற்பார்வையிட்டு கட்டுப்படுத்தும் அமைப்பும் இல்லை. எனவே, ரீட்டெய்ல் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்க, தொழில்துறையில் வரையறுக்கப்பட்ட நேர்மையான வர்த்தக விதிகள் தேவை எனக் கருதப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் தங்கத்தை ஆன்லைனில் வாங்குவதற்கும், அதை தொழில்முறைப்படி நிர்வகிக்கப்படும் பெட்டகங்களில் தங்கள் சார்பாக சேர்த்து வைப்பதற்கும் டிஜிட்டல் முதலீட்டு முறை உதவுகிறது. மேலும், வாடிக்கையாளருக்குத் தேவைப்படும்போது குறைந்தபட்சம் 1 கிராம் வரை தங்கத்தைத் திரும்ப எடுத்துக் கொள்ளவும் இதில் முடியும். தங்கத்தில் டிஜிட்டல் முதலீடு செய்வது இன்னும் இளம்பருவ நிலையிலேயே இருக்கிறது. இதில் நம்பகம், தாங்கக்கூடிய செலவு, ஒளிவுமறைவற்ற தன்மை, நேரடியான உடைமை என்று பல நன்மைகள் உள்ளன. இந்த முறையானது பக்குவமடைந்து, தொழில்நுட்பமும் மேம்படும்போது தங்கம் தொடர்பான தொழில் முழுவதற்குமே மிகச்சிறந்த நடைமுறையாக இது மாறி ஒரு முன்னோடியாகத் திகழும்.

[1]ஆதாரம்: 2016-இல் இந்தியாவில் இந்திய கோல்டு பாலிசி மையம் கோல்டு எக்சேஞ்ஜ் நிறுவுவதற்கான வாய்ப்பு.
[2]~இந்தியாவில் 87% தங்கம் பெண்களிடம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
[3]~குடும்பச் சொத்துக்களில் 20% தங்கமாக வைக்கப்பட்டுள்ளது.
[4]~இந்தியாவில் 80% தங்கத்திற்கான டிமாண்ட் நகைகளாக உள்ளன. ஆனால் இதுவே உலகளாவிய நிலையில் ~ 35% மட்டுமே.

நேர்மையான வர்த்தக நெறிகள் என்பது ஒதுக்கீடு செய்யப்பட்ட தங்க புராடக்டுகளுக்கு பொருத்தமானது. (இதில் தொகுப்பு ஒதுக்கீடும் அடங்கும்). இது வாடிக்கையாளர்களுக்கு தங்கத்தை முழுமுதல் உடமையாக்குகிறது. ஆனால், இது பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்படும் நிதிகள், நிதிசார்ந்த புராடக்டுகள் அல்லது எந்த வடிவிலான ஒதுக்கீடு செய்யப்படாத தங்கப் புராடக்டுகள் போன்ற தங்கத்தின் உத்தரவாதம் பெற்ற நிதி செக்யூரிட்டிகளுக்கு பொருந்தாது.

நேர்மையான வர்த்தக நெறிகளை சரியான முறையில் பரப்பி செயல்படுத்துவதால் தங்க புராடக்டுகளைப் பயன்படுத்துவோரின் நம்பிக்கை அதிகரிக்கும். இதன் விளவாக, ஏற்கனவே நிலைத்துள்ள மற்றும் புதிய தங்க புராடக்டுகளுக்கு டிமாண்ட் அதிகரிக்கும். இதனால் நுகர்வோரும், தொழில்துறையினரும் பயனடைவார்கள். அந்த நோக்கிலான ஒரு நடவடிக்கைதான் இந்த ஆவணம். இது டிஜிட்டல் முதலீடு, தங்கம் ரீட்டெய்லிங் தொடர்பான நேர்மையான வர்த்தக நெறிகளை விவரிக்கிறது. இது போன்ற நேர்மையான வர்த்தக நெறி ஆவணங்கள் தங்கம் மதிப்புத் தொடரில் உள்ள சுத்திகரிப்பு, மதிப்பீடு மற்றும் ஹால்மார்க்கிங், புல்லியன் டிரேடிங், தயாரிப்பு மற்றும் ரீட்டெய்லிங் ஆகியன உள்ளிட்ட இதர நடவடிக்கைகளும் உள்ளன. மேலும், எதிர்காலத்தில் தேவைக்கு ஏற்ப பெட்டக வசதி, கடன் வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்கும் நேர்மையான நடத்தை நெறிகளை நாங்கள் உருவாக்கக் கூடும்.

தங்கத் தொழில்
மதிப்புத் தொடரமைப்பு

சுரங்கம் | சுத்திகரிப்பு | மதிப்பீடு & ஹால்மார்க் செய்தல் | புல்லியன் வர்த்தகம் | தயாரிப்பு | சில்லறை வர்த்தகம் | **டிஜிட்டல் முதலீடு கோல்டு ரீட்டெய்லிங்**

பல தொழில்துறை நிபுணர்கள், விற்பனை செய்வோர்,மற்றும் தொடர்புடைய இதர பிரமுகர்களுடன் கலந்துரையாடி இந்த நேர்மையான வர்த்தக நெறிகள் வகுக்கப்பட்டுள்ளன. உலகெங்கும் நிலவும் மிகச்சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்பெளம், மாறிவரும் நுகர்வோரின் போக்குகளுக்கு ஏற்பவும் இந்த நெறிகள் காலப்போக்கில் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும் எனவும், இந்தியாவில் நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இந்திய தங்கச் சந்தை

நேர்மையான வர்த்தக நெறிகள்- டிஜிட்டல் தங்கம் முதலீடு

நடவடிக்கைகள்	எல்லா வேலைகளும் நேர்மையான முறையில் நடத்தப்படுதல்
தங்கம் கொள்முதல்	1. நான் எனது சப்ளையர்கள் பற்றிய உரிய தகவல்களை அனைத்தையும் பதிவு செய்வேன் என்றும், போதிய 'உங்கள் புரொவைடரை அறியுங்கள்' என்னும் கண்காணிப்பை மேற்கொள்வேன் என்றும் உறுதி கூறுகிறேன். 2. எனது சப்ளையர்களிடம் இருந்து வரும் தங்க புராடக்டுகளின் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள போதிய பரிசோதனைகளை சுயேச்சையாகச் செய்வேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன். 3. சப்ளையர்களுடனான எல்லா பரிமாற்றங்களுக்கும் உரிய ஆவணங்களை ஏற்படுத்தி எனது பிஸினஸை வெளிப்படையாக நடத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன். 4. தொழில்துறை ஏற்றுக்கொண்ட நேர்மைத் தரங்களைப் பின்பற்றும் தங்க புராடக்டுகளை மட்டுமே ஏற்பேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.
மார்க்கெட்டிங்	5. நான் புராடக்டுகளையும், சேவைகளையும் தெளிவாகவும், நேர்மையாகவும் விற்பனை செய்வேன்; விலை, உடமைப் பரிமாற்றம், ஏற்படக்கூடிய இடர்கள் ஆகியன உள்ளிட்ட புராடக்டின் முக்கிய தன்மைகளை தெரியப்படுத்துவேன் என உறுதி கூறுகிறேன். 6.. தங்க புராடக்டுகள் பற்றிய விளக்கக் குறிப்புக்களை நான் வாடிக்கையாளர்களுக்குத் தருவேன் அல்லது அவை கிடைக்கும் நம்பத்தகுந்த இடம் பற்றி சுட்டிக்காட்டுவேன் என உறுதி கூறுகிறேன்.
விற்றல்	1. நேர்மையான விலை மற்றும் கட்டணங்கள் பெறுவேன் என்றும் முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிப்பேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன். 8. ஒவ்வொரு விற்பனைக்கும் தேவையான கேஒய்சி தகவல்களைப் பெற்று வரி இன்வாய்ஸ் உருவாக்குவேன் என்று நான் உறுதி கூறுகிறேன். 9. வாடிக்கையாளர்கள் வைத்திருக்கும் தங்கத்தின் மீது கடன் கொடுத்தவர்கள் எந்த ஒரு உரிமையும் கோராமல் இருக்க தங்கத்தின் சட்டப்பூர்வ உரிமைகளை வாடிக்கையாளர் பெயரில் மாற்றித் தருவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.
சேர்த்து வைத்தல் மற்றும் டெலிவரி செய்தல்	10. மதிப்பு வாய்ந்த பொருட்களைப் பாதுகாப்பாக எடுத்து வைப்பதற்கும், அவற்றைக் கொண்டு செல்லவும் போதுமான ஆப்பரேஷனல் நடைமுறைகளைச் செய்வேன் என்று நான் உறுதி கூறுகிறேன். 11. உரிய காலக்கெடுவுக்குள் அல்லது கேட்கும்போது வாடிக்கையாளர்களுக்குத் தங்கத்தை டெலிவரி கொடுக்கவும், அதை திரும்பப் பெறவும் வசதி செய்து கொடுப்பேன் என உறுதி கூறுகிறேன். 12. வாடிக்கையாளர் செய்த முதலீட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தங்கத்தை (தொகுப்பு ஒதுக்கீடு உள்பட) எனது தங்கத்தின் ஸ்டாக்கில் இருந்து பிரித்து வைப்பேன் என நான் உறுதி கூறுகிறேன். 13. வாடிக்கையாளர் என்னிடம் வைத்திருக்கும் தங்கத்தின் பொருளடங்கலை அவர் தெளிவாக அடையாளம் காணத்தக்க வகையில் பராமரிப்பேன் என நான் உறுதி கூறுகிறேன். 14. வாடிக்கையாளர் செய்த முதலீட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தங்கத்தை (தொகுப்பு ஒதுக்கீடு உள்பட) வாடிக்கையாளர் எளிதில் அடையாளம் காணும் வகையில் தங்க யூனிட்டாக வைத்திருப்பேன் என நான் உறுதி கூறுகிறேன். (கூடுதலான மிகச்சிறந்த நெறிகள்) 15. நிறுவனப் பணம் மற்றும் தங்கத்திலிருந்து வாடிக்கையாளர்களின் பணம் மற்றும் தங்கத்தை சட்டப்பூர்வமாகப் பிரித்து வைப்பதாக நான் உறுதியளிக்கிறேன்
வாடிக்கையாளர் சப்போர்ட் மற்றும் குறை தீர்ப்பு	16. வாடிக்கையாளர்களின் கருத்துக்கள், விசாரணைகள் மற்றும் குறைகளைப் பெற்று, பதிவு செய்து, அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு உரிய சிஸ்டத்தை ஏற்படுத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன்.
பேமென்ட்ஸ்	17. ஒவ்வொரு வாடிக்கையாளர் மற்றும் சப்ளையர்களிடமும் விதிகள் மற்றும் நிபந்தனைகளையும், பேமென்ட் செய்வதற்கான காலக்கெடுவையும் எவ்வித பாகுபாடும் இன்றி தெளிவாகத் தெரிவித்து அவற்றைப் பின்பற்றுவேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன்

நடவடிக்கைகள்	எல்லா வேலைகளும் நேர்மையான முறையில் நடத்தப்படுதல்
இடர்களைச் சமாளித்தல்	18. வாடிக்கையாளர் என்னிடம் வைத்த தங்கத்திற்கு ஆபத்து ஏற்படாமல் இருக்க போதிய வசதிகளைச் செய்து வைப்பேன் என நான் உறுதி கூறுகிறேன். 19. பிஸினஸில் முக்கியமான நிதி சார்ந்த மற்றும் ஓரளவு நிதி சார்ந்த இடர்களைக் கண்டறிய முனைப்பான நடவடிக்கைளில் ஈடுபட்டு, அவற்றை அகற்றுவதற்கு./ சமாளிப்பதற்கு உரிய நடவடிக்கைளை எடுப்பேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன். 20. டேட்டா பாதுகாப்பு, கணிணிப் பாதுகாப்பு, மற்றும் டேட்டா ஸ்டோரேஜைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்காக பாதுகாப்பான, பயனுள்ள ஐடி நடைமுறைகளைப் பின்பற்றுவேன் என நான் உறுதி கூறுகிறேன். 21. ஏதேனும் தகாத சம்பவம் நிகழுமானால் வாடிக்கையாளரின் தங்கத்தையும், பணத்தையும் அவருக்கு முழுமையாக மாற்றித் தர உறுதிமிக்க திட்டம் ஒன்றை உருவாக்குவேன் என நான் உறுதி கூறுகிறேன். 22. போதிய அளவுக்கு பண மோசடி குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும் நான் உறுதி கூறுகிறேன்.
தணிக்கை மற்றும் சட்டவிதிகளுக்கு கட்டுப்படுதல்	23. உரிய சட்டங்களுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்பட்டு, போதுமான ஆவணங்களைப் பராமரித்து, ஒழுங்குமுறை அதிகாரிகளுக்குத் தேவைப்படக்கூடிய தகவல்களை தெரிவிப்பேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன். 24. மூன்றாவது தரப்பு தொழில்முறை தணிக்கையாளர்களைக் கொண்டு உரிய இடைவெளியில் முக்கியமான பிஸினஸ் மற்றும் செயல்பாட்டுப் பணிகளை (தங்கம் வைத்திருப்பது, கணிணிப் பாதுகாப்பு, மற்றும் தகவல் சிஸ்டம் உள்பட) சுயேச்சையான தணிக்கைக்கு உட்படுத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன். 25. எனது நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்காக தணிக்கை அறிக்கைகள்/நிதி ஸ்டேட்மெண்ட்டுகள் போன்ற தகவல்களை வெளியிடுவேன் என நான் உறுதி கூறுகிறேன்.

இணைப்பு
ரீட்டெய்ல் கோல்டு இன்வெஸ்ட்மென்ட் பிரின்ஸிபல்ஸ்



டிஜிட்டல் முதலீடு தங்க ரீட்டெய்லிங்கிற்காக நேர்மையான நடைமுறைகள் மற்றும் கூடுதலான மிகச்சிறந்த நடைமுறைகளில் உலகளாவிய ஏழு ரீட்டெய்ல் தங்கம் முதலீட்டு நெறிகளும் அடங்கும். அவை கீழே முக்கியமாகத் தரப்பட்டுள்ளன.

எண்	எல்லா வேலைகளையும் நேர்மையாகச் செய்தல் / கூடுதலாக நேர்மையான நடைமுறைகள்	நேர்மை மற்றும் ஒருமைப்பாடு	வெளிப்படைத்தன்மை	வாடிக்கையாளர் சொத்துக்களின் பாதுகாப்பு	பொறுப்பான தங்க ஆதார தேடல்	ஒழுங்குமுறை இணக்கம்	வணிகம் சார்ந்த விவேகம்	செயல்படும் தொழில்முறை
1.	எனது சப்ளையர்கள் பற்றிய உரிய தகவல்களை பதிவு செய்து, 'நோ யுவர் புரொவைடர் கண்காணிப்பை உறுதிப்படுத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன்.				✓	✓		
2.	உயர்தரமான தங்கத்தை, தங்கத்திற்கான தரங்களை பின்பற்றும் நம்பகமான சப்ளையர்களிடம் இருந்து, உரிய முறைப்படி ஆய்வு செய்த பிறகு வாங்குவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.				✓			
3.	சப்ளையர்களுடன் செய்யப்படும் எல்லாப் பரிமாற்றங்களுக்கு உரிய ஆவணங்களைப் பெற்று ஒளிவுமறைவின்றி பிஸினஸ் செய்வேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.		✓			✓		
4.	தொழில்துறை ஏற்றுக்கொண்ட நேர்மையான நெறிகளுக்கு உட்பட்ட தங்க புராடக்டுகளை மட்டுமே வாங்குவேன் என நான் உறுதி கூறுகிறேன்.				✓			
5.	தங்கத்தின் விலை, உடமைப் பரிமாற்றம், மற்றும் ஏற்படக்கூடிய இடர்கள் போன்றவற்றை எடுத்துரைத்து, புராடக்டுகள் மற்றும் சேவைகளை நேர்மையாகவும், தெளிவாகவும் மேம்படுத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன்.	✓						
6.	தங்க புராடக்டுகள் பற்றிய விளக்கக் குறிப்புக்களை நான் வாடிக்கையாளர்களுக்குத் தருவேன் அல்லது அவை கிடைக்கும் நம்பத்தகுந்த இடம் பற்றி சுட்டிக்காட்டுவேன் என உறுதி கூறுகிறேன்.	✓						
7.	நேர்மையான விலை மற்றும் கட்டணங்கள் பெறுவேன் என்றும் முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிப்பேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.	✓	✓					
8.	அனைத்துத் தரப்பில் இருந்தும் கேஒய்சி பெற்ற பிறகு விற்கப்படும் தங்கத்தின் ஒவ்வொரு விற்பனைக்கும் வரி இன்வாய்ஸ் வழங்குவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.	✓				✓		
9.	வாடிக்க்கையாளரிடம் உள்ள தங்கத்தின் மீது புரொவைடருக்கு கடன் கொடுத்தவர்கள் கிளெய்ம் செய்யாமல் இருக்க சட்டப்படி முழுமையாக தங்கத்தை ஒப்படைப்பேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.	✓		✓				
10.	மதிப்பு வாய்ந்த பொருட்களை பாதுகாப்பாக சேர்த்து வைக்கவும், கொண்டு செல்லவும் போதிய ஆப்பரேஷனல் கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவேன் என நான் உறுதி கூறுகிறேன்.			✓				✓
11.	ஒப்புக் கொள்ளப்பட்ட காலவரம்புக்கு உட்பட்டும், கோரும்போதும் வாடிக்கையாளருக்கு தங்கத்தை டெலிவரி கொடுக்கவும்/ திரும்பப் பெறவும் வகை செய்வேன் என நான் உறுதி கூறுகிறேன்.	✓						
12.	முதலீடு செய்த அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஒதுக்கீட்டு தங்கத்தை (தொகுப்பு ஒதுக்கீடு உட்பட) சொந்தக் கையிருப்பு தங்கத்தில் இருந்து பிரித்து வைப்பேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.			✓				✓
13.	வாடிக்கையாளர் சார்பாக வைத்திருக்கும் தங்கத்தின் பொருளடங்கலை எளிதில் பார்க்கத்தக்க வகையில் வைத்திருப்பேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.		✓					✓
14.	அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஒதுக்கீட்டு தங்கத்தை (தொகுப்பு ஒதுக்கீடு உட்பட) அடையாளம் காணத்தக்க தங்க யூனிட்டாக வைத்திருக்க நான் உறுதி கூறுகிறேன்.		✓					✓
15.	நிறுவனத்தில் உள்ள தங்கம் மற்றும் பணத்தில் இருந்து வாடிக்கையாளரின் தங்கம் மற்றும் பணத்தை சட்டமுறைப்படி பிரித்து வைப்பேன் என்று நான் உறுதி கூறுகிறேன்,			✓			✓	✓

எண்	எல்லா வேலைகளையும் நேர்மையாகச் செய்தல் / கூடுதலாக நேர்மையான நடைமுறைகள்	நேர்மை மற்றும் ஒருமைப்பாடு	வெளிப்படைத்தன்மை	வாடிக்கையாளர் சொத்துக்களின் பாதுகாப்பு	பொறுப்பான தங்க ஆதார தேடல்	ஒழுங்குமுறை இணக்கம்	வணிகம் சார்ந்த விவேகம்	செயல்படும் தொழில்முறை
16.	வாடிக்கையாளர்களிடம் இருந்து விசாரணகளையும், புகார்களையும் பெறவும், பதிவு செய்யவும், குறை தீர்க்கவும் உரிய மெக்கானிசத்தை ஏற்படுத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன்.	✓						
17.	ஒவ்வொரு வாடிக்கையாளர் மற்றும் சப்ளையர்களிடமும் விதிகள் மற்றும் நிபந்தனைகளையும், பேமெண்ட் செய்வதற்கான காலக்கெடுவையும் எவ்வித பாகுபாடும் இன்றி தெளிவாகத் தெரிவித்து அவற்றைப் பின்பற்றுவேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.	✓	✓			✓		
18.	வாடிக்கையாளரின் பணம் மற்றும் தங்கத்திற்கு ஆபத்து ஏற்படாத வகையில் போதிய விதிகளை வைத்திருப்பேன் என நான் உறுதி கூறுகிறேன்.			✓			✓	✓
19.	பிஸினஸில் முக்கியமான நிதி சார்ந்த மற்றும் ஓரளவு நிதி சார்ந்த இடர்களைக் கண்டறிய முனைந்து செயல்பட்டு, அவற்றை அகற்றுவதற்காக உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.						✓	
20.	டேட்டா பாதுகாப்பு, கணிணிப் பாதுகாப்பு, மற்றும் பாதுகாப்பான டேட்டா ஸ்டோரேஜ் ஆகியவற்றை உறுதிப்படுத்த பாதுகாப்பான மற்றும் பயனுள்ள ஐடி நடைமுறைகளை செயல்படுத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன்.					✓		✓
21.	ஏதேனும் நிகழுமானால், வாடிக்கையாளரின் தங்கம் மற்றும் பணத்தை முழுவதுமாக மாற்றித் தருவதற்கு திட்டம் ஒன்றை உருவாக்குவேன் என நான் உறுதி கூறுகிறேன்.						✓	✓
22.	பண மோசடியைக் கட்டுப்படுத்தவும், சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும் நான் உறுதி கூறுகிறேன். (கூடுதல் சிறந்த நடைமுறைகள்)					✓		
23.	உரிய சட்டங்களுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் கட்டுப்பட்டு, போதுமான ஆவணங்களைப் பராமரித்து, ஒழுங்குமுறை அதிகாரிகளுக்குத் தேவைப்படக்கூடிய தகவல்களை தெரிவிப்பேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.					✓		
24.	மூன்றாவது தரப்பைக் கொண்டு ஒழுங்கான இடைவெளிகளில் சுயேச்சையான தணிக்கை செய்யவும், அதில் முக்கியமான பிஸினஸ் மற்றும் ஆப்பரேஷனல் பணிகளை உள்ளடக்கவும் (தங்கம் வைத்திருப்பது, கணிணிப் பாதுகாப்பு, தகவல் சிஸ்டம் உள்பட) நான் உறுதி கூறுகிறேன்.		✓					✓
25.	தணிக்கை அறிக்கைகள்/ நிதி ஸ்டேட்மெண்ட்டுகள் போன்ற தகவல்களை தெரிவித்து எனது நம்பகத்தன்மையை உயர்த்துவேன் என நான் உறுதி கூறுகிறேன்.		✓					

செயல்படுத்திட வழிகாட்டி

கொள்முதல்

1 எனது சப்ளையர்கள் பற்றிய உரிய தகவல்களை பதிவு செய்து வைத்து, 'நோ யுவர் புரொவைடர்' சோதனைகளைச் செய்வேன் என நான் உறுதி கூறுகிறேன்.

- புதிய சப்ளையரிடம் எந்த ஒரு பிஸினஸ் பரிமாற்றத்தையும் தொடங்குவதற்கு முன்னால், கீழே இருப்பது போன்று சப்ளையர்கள் பற்றிய உரிய தகவல்களை கவனத்துடன் சேகரித்து பதிவு செய்ய வேண்டும்.
  - பதிவு எண்/ பிஐஎஸ் லைசென்ஸ்
  - முகவரி
  - ஜிஎஸ்டி சான்றிதழ்
  - பான் விவரங்கள்
  - மார்க்கெட் புலனாய்வு மற்றும் நடுவர் (இருப்பின்) தகவல்
  - புரொமோட்டர்/ இறுதிப் பயனாளி உரிமையாளரின் பெயர் மற்றும் அடையாளச் சான்று
- சப்ளையர்களின் நடைமுறைகளைக் கண்காணித்து, அவர்களைப் பற்றி மார்க்கெட் புலனாய்வு அல்லது வேறு எந்த நம்பகமான ஆதாரங்களில் இருந்து அபாய எச்சரிக்கை வருமானால் ஆண்டுதோறும் அல்லது விட்டுவிட்டு அப்டேட் செய்ய வேண்டும்..
- திரட்டப்பட்ட தகவலின் அடிப்படையில் நேர்மையற்ற நடைமுறைகள் தெரியவருமானால் அவற்றை உரிய அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.

2 எனது சப்ளையர்களிடம் இருந்து பெறப்பட்ட தங்கப் பொருட்களின் தன்மைகளை உறுதிப்படுத்திட போதுமான சோதனைகளை சுயேச்சையாகச் செய்வேன் என நான் உறுதி கூறுகிறேன்.

- சப்ளையரிடம் இருந்து வந்த தங்கத்தை விற்பதற்கு முன்னால், கீழே காணும் ஸ்டாண்டர்டு டெஸ்டிங் சாதனத்தைப் பயன்படுத்தி (உ-ம்: காரட் மீட்டர், எக்ஸ் ஆர் எஃப் மெஷின்) தங்கப் பொருட்களை இங்கொன்றும் அங்கொன்றுமாக சோதிக்க வேண்டும்.
  - எடை
  - தூய்மை (காரட்டேஜ்)
  - அசுத்தங்கள் இருப்பது
- சப்ளையர் தந்த தகவலில் இருந்து இந்த சோதனையின்போது மாறுபாடு தெரியுமானால், அதைச் சரிசெய்வதற்காக சப்ளையருடன் பகிர வேண்டும்.
- சுயேச்சையாக நடத்திய சோதனைகளின் முடிவுகளில் நேர்மையற்ற நடைமுறைகள் ஏதும் (உ-ம்: அசுத்தப் பொருள் பயன்படுத்தப்பட்டது) தெரியவருமானால் அதைப் பற்றி பிஐஎஸ் போன்ற உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும்.

3 சப்ளையர்களுடனான அனைத்துப் பரிமாற்றங்களுக்கும் உரிய ஆவணங்களை ஏற்படுத்தி ஒளிவுமறைவின்றி பிஸினஸ் செய்வேன் என நான் உறுதி கூறுகிறேன்.

- ஒவ்வொரு வர்த்தகத்தின்போதும் சப்ளையர்களுடன் கீழ்க்காணும் விவரங்களைப் பெற்று ஆவணப்படுத்த வேண்டும்:
  - எடை
  - தூய்மை (காரட்டேஜ்)
  - பர்ச்சேஸ் ஆர்டர்கள்
  - பிஸினஸ் காண்ட்ராக்டுகள்
- தங்கத்தின் அளவு எவ்வளவாக இருந்தாலும், சப்ளையருடனான உறவு எதுவாக இருந்தாலும் கொள்முதல் செய்யப்பட்ட தங்கம் பற்றிய விவரங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
- பழைய டிரான்ஸாக்ஷன்கள் பற்றிய பதிவேடுகளை சட்டத்தில் உள்ளபடி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வைத்திருக்க வேண்டும்.

கூடுதல் சிறந்த நடைமுறைகள்

4 தொழில் துறையால் ஏற்கபட்ட நேர்மையான வர்த்தக நெறிகளைப் பின்பற்றும் தங்க புராடக்டுகளை மட்டுமே ஏற்பேன் என நான் உறுதி கூறுகிறேன்.

- தொழில் துறையால் ஏற்கப்பட்ட நேர்மையான வர்த்தக நெறிகளை , உ-ம்: சான்று பெற்ற ரீஃபைனரிகள், பிரபல புல்லியன் டிரேடர்கள் அல்லது புல்லியன் வங்கிகள், ஊக்கப்படுத்துங்கள்.
- பொறுப்புடன் தங்கத்தின் தரங்களைப் பின்பற்றும் எல் பி எம் ஏ, இந்தியா குட் டெலிவரி ஸ்டாண்டர்ட்ஸ் போன்ற சப்ளையர்கள் மற்றும் அவர்களின் பார்ட்னர்களிடம் இருந்து கொள்முதல் செய்யுங்கள்.

மார்க்கெட்டிங்

5 புராடக்ட்ஸ் மற்றும் சேவைகளை அபிவிருத்தி செய்வேன் என்றும், விலை, உடமைப் பரிமாற்றம் மற்றும் ஏற்படக்கூடிய இடர்கள் பற்றி தெளிவாகவும், நேர்மையாகவும் விளக்கிக் கூறுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

- தங்கத்தின் விலை, தூய்மை, எடை போன்ற முக்கியமான தன்மைகள் குறித்து மார்க்கெட்டிங் பொருட்களின் மீதும், புராடக்ட் விற்பனை விளம்பரங்களிலும், வலைதளத்திலும், மொபைல் செயலிகளிலும் தெளிவான மற்றும் நேர்மையான தகவல்களைத் தருதல்
- குறிப்பாக இஎம்ஐ, எஸ்ஐபி திட்டங்களில் விற்கப்படும் தங்கத்தின் உடமை எந்த கட்டத்தில், எந்த நேரத்தில் சட்டப்பூர்வமாக மாற்றப்படும் என்பதை தெரிவித்தல்.
- தங்கத்தில் முதலீடு செய்வது தொடர்பான முக்கிய இடர்களை எளிதில் வாடிக்கையாளர் புரிந்து கொள்ளும்படி தெரிவித்தல்.
- ஆஃபர் தொடர்பான ஒழுங்குமுறை வழிகாட்டு விதிகள் மற்றும் தேவைகளை வாடிக்கையாளர்களுக்கு விளக்குதல்.
- மற்ற புராடக்டுகள் அல்லது முதலீட்டுச் சொத்துக்களுடன் ஒப்பிட்டு சமச்சீரான முறையில் எடுத்துரைத்தல்.

6 தங்க புராடக்டுகள் பற்றிய விளக்கக் கையேடுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவேன் என்றும் அல்லது அவை நம்பத்தகுந்த இடத்தில் எங்கு கிடைக்கும் என்பதையும் தெரிவிப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

- வாடிக்கையாளர்களுக்கு அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் / "எவ்வாறு" வீடியோக்கள் போன்ற விளக்கப் பொருட்களை வழங்குதல். இந்தப் பொருட்கள் கம்பெனி வலைதளம், மொபைல் செயலி போன்ற ஊடகங்கள் மூலமாக எளிதில் கிடைக்க வேண்டும். தங்கத்தை எவ்வாறு வாங்குவது மற்றும் விற்பது என்பது போன்ற தகவல்கள் இதில் இடம்பெற வேண்டும்.
- வாடிக்கையாளரின் விசாரணைகள்/புகார்கள் தெரிவிக்க கஸ்டமர் சப்போர்ட் பற்றி தெரிவித்தல். கஸ்டமர் சப்போர்ட் சேவைகளை தொழில்முறை முதலீடு அல்லது வரி ஆலோசனைகள் எனத் தவறாகப் புரிந்து கொள்ளாமல் இருக்க உறுதி செய்தல், வாடிக்கையாளரை நிர்ப்பந்திக்காமல் இருத்தல்.
- வாடிக்கையாளர்களுக்கு நம்பகமான தகவல் ஆதாரங்களுக்கு வழிகாட்டவும் (உ-ம்: BIS வலைத்தளம், LBMA தரநிலைகள், உலக தங்க கவுன்சில்) தங்கத் தொழிலில் சிறந்த நடைமுறைகளைப் பற்றி மேலும் அறியவும் தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும் உதவும்.

ஒரு உதாரணம்:

நான் தங்கத்தில் டிஜிட்டல் முதலீடு செய்யும் ஒரு ரீட்டெய்லர். தங்கத்தில் முதலீடு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை என்பதாலும், புரிதல் / அறிவு குறைவே என்பதாலும் பிஸினஸை வளர்க்க முடியாமல் திண்டாடுகிறேன். எனது வரையறைக்கு உட்பட்ட திறமைகளுடன் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

ஏற்படக்கூடிய இடர்கள்:

தங்கத்தில் முதலீடு செய்வது பற்றி வாடிக்கையாளர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவது முக்கியமாகும். அதற்கு புராடக்ட் பற்றி முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பின்வரும் வழியில் நீங்கள் அணுகலாம் -

- தங்கத்தில் முதலீடு பற்றி வாடிக்கையாளர்கள் புரிந்து கொள்ள கம்பெனி வலைதளம்/ செயலியில் "எவ்வாறு" என்று விளக்கும் அறிமுக வீடியோக்களைப் போட வேண்டும். அவற்றில் வாடிக்கையாளர்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய அம்சங்கள் மற்றும் முதலீடு செய்வதற்கு முன்பு வாடிக்கையாளர் பரிசீலிக்க வேண்டிய விஷயங்கள் இடம்பெற வேண்டும்.

- தங்கத்தின் விலை, தூய்மை, எடை போன்ற முக்கியமான தன்மைகள் குறித்து மார்க்கெட்டிங் பொருட்களில் தெளிவான மற்றும் நேர்மையான தகவல்களைத் தருதல். தங்கத்தின் உடமை எந்த கட்டத்தில், எந்த நேரத்தில் சட்டப்பூர்வமாக மாற்றப்படும் என்பதை தெரிவித்தல்.

- திரும்பப் பெறுதல்/டெலிவரி நேரம், "x" மணி நேரத்திற்குள் வாடிக்கையாளருக்கு சட்டபூர்வ உரிமைகளை மாற்றுதல், "y" ஆண்டுகளுக்கு கிடைக்கும் ஸ்டோரேஜ் வசதி போன்றவற்றை விளக்க வேண்டும்.

- மற்ற புராடக்டுகள் அல்லது முதலீட்டுச் சொத்துக்களுடன் ஒப்பிட்டு சமச்சீரான முறையில் எடுத்துரைத்தல்.

விற்பனை செய்தல்

7 **நேர்மையான விலை மற்றும் கட்டணங்களை வசூலிப்பேன் என்றும், முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளருக்குத் தெரிவிப்பேன் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.**

- உள்ளூர் மார்க்கெட் நிலவரத்துக்கு ஏற்ப தங்கத்தின் விலை, ஸ்டோரேஜ், இன்ஷ்யூரன்ஸ், டெலிவரி, திரும்பப் பெறுவதற்கான கட்டணம், மற்ற கட்டணங்கள், வரிகள் போன்ற தகவல்களை வாடிக்கையாளருக்கு தெளிவாகத் தெரிவித்து நேர்மையான விலை பெற வேண்டும்.
- வாடிக்கையாளர் வாங்குவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்திய பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரே விலையை கூறவேண்டும்.
- வாடிக்கையாளரின் உரிமைகள், உடமையை சட்டபூர்வமாக மாற்றுதல், டெலிவரி/ திரும்பப்பெறும் கொள்கை, ஸ்டோரேஜ் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடுகள், ரிட்டர்ன் கொள்கை போன்ற முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தெரிவித்தல்.
- முக்கிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஒளிவு மறைவாக இல்லாமல், வாடிக்கையாளர் புரிந்து கொள்ளும்படி எளிமையாக இருப்பதை உறுதி செய்தல்
- கட்டணங்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவற்றில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் செயல்படுத்துவதற்கு முன்பாக வாடிக்கையாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

---

8 **கேஒய்சி தகவல்களை எல்லா விற்பனை மையங்களிலும் பெற்ற பிறகே ஒவ்வொரு விற்பனைக்கும் வரி இன்வாய்ஸ்களை வழங்குவேன் என நான் உறுதி கூறுகிறேன்.**

- இன்வாய்ஸில் பின்வரும் முக்கிய தகவல்கள் இடம்பெற வேண்டும்:
  - விலை (தங்கத்தின் அடிப்படை விலை, செய்கூலி, ஸ்டோரேஜ், இன்ஷ்யூரன்ஸ், டெலிவர்/ திரும்பப் பெறும் கட்டணம், மற்ற கட்டணங்கள், வரி போன்றவை)
  - புராடக்ட் (தூய்மை, எடை)
  - வாடிக்கையாளரின் உரிமைகள் (பிஜஎஸ் வலைதளத்திற்கு லிங்க் உட்பட)
  - பரிமாற்றம் (தேதி மற்றும் நேரம், இன்வாய்ஸ் எண் போன்றவை)
- இன்வாய்ஸிங் தொடங்குவதற்கு முன்பு எந்த ஒரு வாடிக்கையாளர் (தனிநபர், நிறுவனம்) பற்றிய கேஒய்சி விவரங்களை சட்டத்தின் தேவைக்கு ஏற்ப திரட்ட வேண்டும்
- விற்பனை செய்தமைக்கான கேஒய்சி விவரங்களை உங்களுடைய/ பார்ட்னரின் தளங்களில் வைத்து பராமரிக்க வேண்டும்.

---

9 **வாடிக்கையாளரிடம் உள்ள தங்கத்தின் மீது புரொவைடருக்குக் கடன் கொடுத்தவர்கள் உரிமை கோராமல் இருக்க சட்டபூர்வ உரிமையை ஒரேயடியாக மாற்றித் தருவேன் என நான் உறுதி கூறுகிறேன்.**

- வாடிக்கையாளருக்கு தங்கத்தின் முழு உரிமையைத் தரும் வகையில் சட்டபூர்வ உடமையை மாற்றித்தருதல், அவரிடம் உள்ள தங்கத்தின் மீது திவால் / நஷ்டம் போன்ற தகாத சம்பவம் நிகழுமானால் கடன் கொடுத்தவர்கள் உரிமை கோராமல் இருக்க உறுதி செய்தல்.
- பரிமாற்ற நடைமுறையின்போது எந்தக் கட்டத்தில் சட்டபூர்வ உடமை மாற்றித் தரப்படும் என்பதை நேரம் காலத்துடன் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

சேர்த்து வைத்தல் மற்றும் டெலிவரி

10 விலைமதிப்பற்ற பொருட்களை பாதுகாப்பாக எடுத்து வைக்கவும், கொண்டு செல்லவும் போதிய ஆப்பரேஷனல் ஏற்பாடுகளைச் செய்வேன் என நான் உறுதி கூறுகிறேன்.

- தங்கத்தை உள்ளூர் பாதுகாப்புத் தரங்களுக்கு ஏற்ப, தொழில்முறைப்படி இயங்கும் அதிகப் பாதுகாப்பு உள்ள பெட்டகங்களில் வைக்க வேண்டும். வைக்கப்படும் வளாகங்கள் புரொவைடரின் இடர்களுக்கு உட்படாமல் சுதந்திரமான இடங்களாக இருக்கட்டும்.
- தனிப்பட்ட தொழில்முறைக் காப்பாளரின் பெட்டகத்தில் தங்கம் வைக்கப்படுவதை உறுதி செய்யுங்கள். சார்பு காப்பாளர்கள் பயன்படுத்தப்பட்டால் அவர்களை உரிய காண்ட்ராக்ட் நடைமுறை மூலம் பேனலில் சேர்க்க வேண்டும்.
- சேர்த்து வைக்கப்பட்டுள்ள அல்லது கடப்பில் உள்ள தங்கத்திற்கு இழப்பு, திருட்டு அல்லது சேதம் போன்றவற்றுக்கு எதிராக சப்ளையர் / லாஜிஸ்டிக்ஸ் நிறுவனம் இன்ஷ்யூரன்ஸ் எடுக்க வேண்டும்.

11 வாடிக்கையாளருக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட தவணைப்படியும், அவர் கோரும் போதும் திரும்ப எடுத்துக் கொள்ள/ டெலிவரி கொடுக்க வசதி செய்வேன் என உறுதி கூறுகிறேன்.

- தங்கத்தை திரும்ப எடுப்பது/டெலிவரி செய்வது தொடர்பாக வாடிக்கையாளருக்கு உள்ள உரிமைகளை தெளிவாகத் தெரிவிக்கவும். வாடிக்கையாளர் தனிப்பட்ட முறையில் அல்லது ஒதுக்கீடு முறையில் ஒரு தொகுப்பாக தங்கத்தை வைத்திருந்தால் உரிமை குறித்து உள்ள வித்தியாசங்களை எடுத்துக் காட்டுங்கள்.
- திரும்ப எடுப்பதற்கு/டெலிவரி செய்வதற்கு குறைந்தபட்ச லாட் சைஸ்கள் என்ன என்பதை வரையறுக்கவும். அதை வாடிக்கையாளர் வாங்கும்போது தெளிவாக தெரிவிக்கவும்.
- டெலிவரி தேவைப்படும்போது, தொழில்முறை பாதுகாப்பு கேரியர்கள் மூலமாகவும், உறுதி செய்யப்பட்ட காலக்கெடுவுக்குள்ளும் நடத்தப்பட வேண்டும்.
- உண்மையான டெலிவரி வேண்டுகோள்கள் மட்டுமே நிறைவேற்றப்படுவதற்காக போதுமான அளவுக்கு கண்காணிப்பு மற்றும் சோதனைகளை வைக்கவும். உ-ம்: வாடிக்கையாளர்தான் டெலிவரி வேண்டுகோள் வைத்திருக்கிறார் என்பதையும், டெலிவரி முகவரி அங்கீகரிக்கப்பட்ட முகவரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்த அங்கும் இங்குமாக ரேண்டம் சோதனைகளைச் செய்யவும்.

12 தொகுப்பு ஒதுக்கீடு உள்பட ஒதுக்கப்பட்ட தங்கத்தை எனது சொந்த ஸ்டாக் தங்கத்தில் இருந்து முழுமையாகப் பிரித்து தனியாக வைக்க உறுதி கூறுகிறேன்.

- வாடிக்கையாளரின் தங்கத்தை தனித்தனி ஒதுக்கீடாக (ஒரு தனிப்பட்ட வாடிக்கையாளர் தம்மால் மட்டுமே அடையாளம் காணத்தக்க ஒரு தங்கப் பாளமாக அல்லது நாணயமாக தனித்தனியாக வைத்திருக்கிறார்) அல்லது தொகுப்பு ஒதுக்கீடாக (பல வாடிக்கையாளர்கள் இணைந்து தங்களால் மட்டுமே அடையாளம் காணத்தக்க அளவுகளில்) பெட்டகங்களில் வைக்கின்றனர்.
- வாடிக்கையாளர்களின் தங்கம் தனித்தனியாக, புரொவைடரின் தங்கத்தில் இருந்து பிரித்து ஸ்டோர் செய்யப்படுவதை உறுதி செய்யுங்கள். தனி இடங்களில் இருப்பது நல்லது.
- வாடிக்கையாளரின் தங்கத்தை புரொவைடர் எடுக்காமலும், பயன்படுத்தாமலும் இருக்க உரிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்துங்கள். உ-ம்: வாடிக்கையாளரின் தங்கத்தை ஒரு டிரஸ்டி / காப்பாளரிடம் தனித்தனியாக ஒப்படைத்து வைக்கவும்.
- வைக்கப்பட்டுள்ள வாடிக்கையாளரின் தங்கம் டிரஸ்டி/காப்பாளரிடம் உள்ள பொருளடங்கலுடன் ஒத்துப்போகிறதா என்பதை தினமும் கண்காணியுங்கள்.

13 வாடிக்கையாளரின் தங்கத்தை தெளிவாக அடையாளம் காணத்தக்க வடிவில் பொருளடங்கலில் வைப்பதற்கு நான் உறுதி கூறுகிறேன்.

- வாடிக்கையாளரின் தங்கத்தை பொருளடங்கலில் தெளிவாக அடையாளம் காணத்தக்க வடிவில் பார் எண்கள் அல்லது இதர பிரத்யேக குறிகளுடன் மறைமுகமான தங்க யூனிட்டுகளாக வைத்து ஒரு பட்டியல் போடுங்கள்.
- மேற்கொண்டும் தங்கம் வைக்கப்படுமானால்/ அல்லது எடுக்கப்படுமானால் பட்டியலை திருத்துங்கள்.

கூடுதலாக மிகச்சிறந்த நடைமுறைகள்

14 ஒதுக்கப்பட்ட தங்கம் அனைத்தையும் (தொகுப்பு ஒதுக்கீடு உள்பட) ஒவ்வொரு வாடிக்கையாளரும் அடையாளம் காணத்தக்க மறைமுக தங்க யூனிட்டாக உ-ம்: பாளம் அல்லது நாணயம், வைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன்.

- வாடிக்கையாளர்கள் உங்களிடம் வைத்திருக்கும் தங்கத்தை ஒன்று/ பலமடங்கு அடையாளம் காணத்தக்க தங்க யூனிட்டுகளாக மாற்றுங்கள் -
  - தனிநபர் ஒதுக்கீடு (ஒரு வாடிக்கையாளர் தனித்தனியாக ரகசியமாக அடையாளம் காணத்தக்க தங்க யூனிட்டாகவும்
  - தொகுப்பு ஒதுக்கீட்டில் (பல வாடிக்கையாளர்கள் இணைந்து ரகசியமாக அடையாளம் காணத்தக்க தங்க யூனிட்டாகவும்) கேஸ்களில் வைத்திருக்கிறார்கள்.

15 நிறுவனத்தின் பணம் மற்றும் தங்கத்தில் இருந்து வாடிக்கையாளர்களின் தங்கம் மற்றும் பணத்தை சட்டப்பூர்வமாக பிரித்து வைக்க நான் உறுதி கூறுகிறேன்.

- வாடிக்கையாளரின் பணத்தை கூடுமானவரை சட்டப்படியான தனித்தனியாக ஒரு டிரஸ்டி அக்கவுண்ட்டில் வைக்கவும். அல்லது வாடிக்கையாளர்களுக்காக பொறுப்பாளர் / சார்பாளர் ஒருவரை உருவாக்கி வைத்திருக்க வேண்டும். அதை கம்பெனியின் பேலன்ஸ் ஷீட் உள்பட செயல் மூலதனத்துடன் கலக்கக் கூடாது.
- வாடிக்கையாளர்/ ரெகுலேட்டர் தனித்தனியாக குறிப்பாக அங்கீகரித்தாலன்றி, வாடிக்கையாளரின் தங்கத்தை வைத்து கடன்கொடுப்பதோ, கடன் பெறுவதோ கூடாது.

வாடிக்கையாளர் சப்போர்ட் மற்றும் குறைதீர்ப்பு

16 ˙வாடிக்கையாளரின் கருத்துக்கள், விசாரணைகள் மற்றும் புகார்களைப் பெற்று, பதிவு செய்து, தீர்த்து வைப்பதற்கு போதிய சிஸ்டம்களையும், மெக்கானிசத்தையும் உருவாக்கி செயல்படுத்துவேன் என நான் உறுதி கூறுகிறேன்.

- கம்பெனி வலைதளம், மொபைல் செயலி அல்லது போன் அழைப்பு மூலமாக புகார் தெரிவிக்கவும், கருத்துக்களைப் பகிரவும் வாடிக்கையாளர்களுக்கு உள்ள உரிமைகளை எடுத்துக்கூறி விளக்குவேன்.
- குறிப்பான பிரச்சினைகளில், உ-ம்: தங்கத்தின் தரம், திருப்பித் தருதல், திரும்ப பெறுதல்/டெலிவரி, விலை போன்றவை, தங்களுக்கு உள்ள பொறுப்புக்களை புரொவைடர் தெரிவிக்க வேண்டும்.
- சப்போர்ட் பணியாளர்களுக்கு போதிய பயிற்சி அளித்து, அவர்கள் நிலையான அலுவலக நேரங்களில் மின்னஞ்சல் மூலமாகவும், குறைந்தது போன் மூலமாகவும் தொடர்பில் இருப்பதற்கு ஏற்பாடு செய்வேன்.
- வாடிக்கையாளர்கள் புகார்களைத் தெரிவிக்க அல்லது விசாரணைகளைக் கேட்பதற்கு ஒரு நேரலை/டிஜிட்டல் சிஸ்டம் ஏற்படுத்துவேன். இந்த சிஸ்டத்தில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் விசாரணைகள் பதிவு செய்யப்பட்டு, பின் தொடரப்பட்டு, தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

பேமென்ட்

17 நான் வாடிக்கையாளர் மற்றும் சப்ளையர் ஒவ்வொருவருக்கும் பாகுபாடு காட்டாமல் விதிகள், நிபந்தனைகள் மற்றும் பணம் கொடுப்பதற்கான காலக்கெடு பற்றி தெளிவாகத் தெரிவிப்பேன் மற்றும் பின்பற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

- வாடிக்கையாளர் மற்றும் சப்ளையர்களிடம் உரிய கொள்முதல் விலை மற்றும் கூடுதல் கட்டணங்கள் (பரிமாற்றம், டெலிவரி, ஸ்டோரேஜ் . டிரேடு செட்டில்மெண்ட் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடுகள், பணம் கொடுப்பதற்கான காலக்கெடு போன்ற முக்கிய விதிகளையும், நிபந்தனைகளையும் தெரிவிப்பது / கோரிப் பெறுவது.
- தங்கத்தை வாங்குவதற்காக போலியான கார்டை பயன்படுத்துவது போன்ற பணம் கொடுக்கல் மோசடியைத் தடுக்க போதிய கட்டுப்பாடுகளைப் பின்பற்றுங்கள்.
- வழங்கப்பட வேண்டிய புராடக்டுகள் மற்றும் சேவைகளின் அளவு மற்றும் தரம் குறித்து ஒப்புக் கொண்டு, அவற்றை சர்வீஸ் லெவல் அக்ரிமெண்ட்ஸில் (எஸ் எல் ஏ-க்கள்) சேர்த்து ஆவணப்படுத்துங்கள். பணம் கொடுப்பதற்காக இந்த ஒப்புக் கொள்ளப்பட்ட விதிகளையும், காலக்கெடுவையும் பின்பற்றுங்கள்.
- விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதேனும் மாற்றங்களைப் புரிந்துகொள்ள சப்ளையர்களுடன் போதுமான தகவல்தொடர்புகளை உறுதிப்படுத்தவும்.
- முன்கூட்டியே பணம் கொடுத்த போதிலும் சப்ளையரினால் தனது பொறுப்பை நிறைவேற்ற முடியாமல் போனால் அப்படிப்பட்ட நிலையில் குறைதீர்ப்பு உத்தி ஒன்றை உருவாக்குங்கள்.

இடர்களைக் கட்டுப்படுத்துதல்

18 வாடிக்கையாளர்களின் பணமும் தங்கமும் இடர்களுக்கு உள்ளாகமல் இருக்க போதிய விதிகளைச் செய்வேன் என நான் உறுதி கூறுகிறேன்.

- புரோவைடருக்கும், சப்ளையருக்கும் இடையே பணமும் தங்கமும் சரியான வகையில் செல்வதற்கு போதிய ஆப்பரேஷனல் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டும். உ-ம்: வாடிக்கையாளரின் தங்கம் மற்றும் பணம் செல்வதைக் கணிசமாகக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட டிரஸ்டியை நியமிக்க வேண்டும். இது அடமான டிரஸ்டியாக செயல்படலாம்).
- உடமைகளை விற்பதன் மூலம் மார்க்கெட்டில் தேவையற்ற இடர்களை ஏற்படுத்தாதீர்கள். வாடிக்கையாளரின் ஆர்டர்களை நிறைவேற்றிட ஸ்டாக்கில் இருக்கும் தங்கத்திற்கு ஒரு வரம்பு இருக்க வேண்டும். அப்போதுதான் விலை ஏற்றத்தாழ்வினால் வாடிக்கையாளர்களுக்கு கணிசமான இழப்பு ஏற்படாது.
- உடமைகள் விற்கப்படுமானால், கம்பெனி சொத்துக்களில் இருந்து வாடிக்கையாளர் வைத்த தங்கத்தை தனியாகப் பிரித்து விடுங்கள். டிஜிட்டல் தங்கம் பிஸினஸில் இருந்து உடமை வர்த்தகத்தை பிரித்து வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய இடர்களைக் குறையுங்கள்.
- திவால், நஷ்டம் போன்ற நிலைமைகளில் வாடிக்கையாளர்களின் உரிமைகள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்க கொள்கைகளை உருவாக்குங்கள். உ-ம்: போதுமான அளவுக்கு நிகர மதிப்பை/ நிதி ஆதாரங்களை பராமரியுங்கள்.

19 நான் எனது பிஸினஸில் உள்ள முக்கியமான நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத இடர்கள் பற்றி விழிப்புடன் இருந்து, அவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என உறுதி கூறுகிறேன்.

- கம்பெனியின் நிதி உறுதியைப் பாதுகாக்க பின்வருவன போன்ற பெரிய இடர்கள் பிஸினஸுக்கும், வாடிக்கையாளருக்கும் ஏற்படுவதை முனைப்புடன் கண்டறிதல்
    - நிதி சார்ந்த இடர்கள் (தங்கம் விலை, செட்டில்மெண்ட் இடர், எதிர்தரப்புக்கு ஏற்படும் இடர்)
    - ஆப்பரேஷனல் இடர்கள் (தவறுகள் அல்லது மோசடியால் ஏற்படும் இடர்கள்)
    - சட்ட விதிகள் மற்றும் பின்பற்றுவதால் உண்டாகும் இடர்கள்.
- இடர்களைக் கட்டுப்படுத்த முழுமையான ஏற்பாடுகளைச் செய்து, இடர்களைக் கண்டறியவும், தடுக்கவும், தவிர்க்கவும் கொள்கைகள், பங்குபணி, மற்றும் பொறுப்பேற்பு என்ற முறையில் பொறுப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
    - சுயேச்சையான இரண்டு தனிநபர்கள் சில முக்கியமான நடவடிக்கைகளைச் செய்து முடிக்க வேண்டிய "கடமைப் பிரிப்பு கோட்பாட்டை" செயல்படுத்துதல். மோசடி மற்றும் செயல்பாட்டு தவறுகளைத் தவிர்க்க அல்லது களைய உதவுதல். உ-ம்: வாடிக்கையாளர் சார்பாக புரொவைடர் தங்க டெலிவரிக்காக வேண்டுகோள் விடுக்கும்போது, அது நியாயமானதுதான் என டிரஸ்டி உறுதிப்படுத்தி, டெலிவரியைத் தொடங்கும்படி காப்பாளருக்கு கட்டளையிடுதல்.
    - எதிர்த்தரப்பு இடரைக் குறைப்பதற்காக குறைந்தபட்ச அட்வான்ஸ் பேமெண்ட் அல்லது அட்வான்ஸ் பேமெண்ட் இல்லை என்ற நிலை
    - சப்ளையர்கள்/ வாடிக்கையாளர்கள்/லாஜிஸ்டிக் ஆதரவு தருவோர் ஆகியோர் பற்றி விரிவாக மதிப்பிட்டு, நம்பகமானவர்களை மட்டுமே (நிதி உறுதி, நேர்மையற்ற வர்த்தகத்தில் ஈடுபடாதவர்கள்) தேர்ந்தெடுக்கவும்.
    - தங்கம், நாணயம், அல்லது இவற்றின் சார்பு நிலை சொத்துக்களின் நிலை போன்ற மார்க்கெட் இடர்களுடன் நிறுவனத்தின் பணப்புழக்கத்தைப் பாதிக்கும் வகையில் ஏற்படும் இடர்களை வரையறை செய்யுங்கள். இடரைக் கட்டுப்படுத்தும் சிஸ்டத்தைச் செயல்படுத்துங்கள்.
    - சப்ளையர்கள், வாடிக்கையாளர்கள், லாஜிஸ்டிக்ஸ் ஏஜன்சீஸ் போன்றவர்களிடம் இருந்து திரட்டப்படும் கேஒய்சி தகவல்களைப் பாதுகாக்க போதிய ஏற்பாடுகளைச் செய்தல்.
    - இணையப் பாதுகாப்புக்கு மிகச்சிறந்த நடைமுறைகளைச் செயல்படுத்தி, சிஸ்டம் கோளாறு உள்ளிட்ட ஐடி நெருக்கடியைச் சமாளிக்க ஆயத்தமாக இருத்தல்.

20 டேட்டா பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக டேட்டாவை ஸ்டோர் பண்ணுவது ஆகியவற்றுக்காக பாதுகாப்பான, பயனுள்ள ஐடி நடைமுறைகளைச் செயல்படுத்திட நான் உறுதி கூறுகிறேன்.

- ஐடி கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாப்பதற்காக அலாரம் சிஸ்டம், அக்ஸெஸ் கண்ட்ரோல் போன்ற போதிய நடவடிக்கைகளை எடுங்கள்.
- மிகவும் நுட்பமான டேட்டாவை ரகசியக் குறியீடு மூலம் பாதுகாக்கவும், வாடிக்கையாளரின் டேட்டாவைப் பாதுகாக்கவும். உரிய டேட்டா ரகசியச் சட்டங்களைப் பின்பற்றவும்.
- பொருத்தமுடைய அனைத்து டேட்டாக்கள் மற்றும் நடவடிக்கைகளையும், தணிக்கை அறிக்கைகளையும் ஆவணப்படுத்துங்கள்.
- ஊடுருவல் டெஸ்டிங் மற்றும் பாதிப்பு ஸ்கேன் நடத்துங்கள், அவசரநிலைத் திட்டங்களை பராமரியுங்கள். பிரச்சினைகளைத் தேடுவதற்கு தடயவியல் அறிவைப் பயன்படுத்துங்கள்.
- வாடிக்கையாளரின் ரெஃபரன்ஸ் அக்கவுண்ட்டுக்கு அப்பால் அங்கீகாரமின்றி பரிமாற்றம் நடைபெறும் அபாயத்தைக் குறைக்க வலுவான உறுதிப்படுத்தும் டெக்னிக்குகளைப் பயன்படுத்துங்கள்.
- சட்டம் அல்லது சட்ட அமலாக்க அதிகாரிகளின் கட்டளை இல்லாமல், யாருக்கும் வாடிக்கையாளரின் எந்த ஒரு டேட்டாவையும் கொடுக்காதீர்கள்.

21 ஏதாவது ஒரு தகாத நிகழ்வு நிகழுமானால் வாடிக்கையாளர்களின் தங்கத்தையும், பணத்தையும் முழுவதுமாக மாற்றித் தருவதை உறுதிப்படுத்திட நிறுவனத்தை மூடுவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்கிட நான் உறுதி கூறுகிறேன்.

- மூடக்கூடிய நிலை ஏற்படும் சூழலைக் கண்டறியுங்கள் (தன்னார்வமாக அல்லது வேறு வகையில்), மூடுவதற்கான நடவடிக்கைகள் என்ன என்பதையும் கண்டறியுங்கள்.
    - மூடும் திட்டத்தை அங்கீகரிப்பதற்கு அல்லது திட்டமிடுவதற்கான பிரச்சினைகளுக்கு பொறுப்புக்களை குறிப்பிடுங்கள்.
    - மூடப்படும் நிலையில் டிரஸ்டி/ காப்பாளரின் பொறுப்பும், பங்கும் என்ன என்பதைத் தெளிவாக மூடல் திட்டத்தில் குறிப்பிடுங்கள்.
- உரிய நேரத்தில் மூடுவதற்கான முடிவை எடுப்பதற்கு வசதியாக முன்கூட்டி எச்சரிக்கும் சிக்னல்கள் மற்றும் முக்கிய அளவீடுகளை தொடர்ந்து கண்காணியுங்கள்.
- மூடும் திட்டத்தினால் ஏற்படக்கூடிய எதிர்மறை பாதிப்புக்களைக் கண்டறிந்து, அவற்றை களைவதற்கான நடவடிக்கைகளை உருவாக்குங்கள். சிறப்புக் கவனம் தரவேண்டிய விஷயங்கள்:
    - வாடிக்கையாளர்களின் தங்கத்தை உடனே அவர்களுக்குத் திருப்பித் தருதல். வாடிக்கையாளர்கள் தாங்கள் வைத்த தங்கத்தை திரும்ப எடுத்துக் கொள்ள அல்லது மாற்றிக் கொள்ள அல்லது தங்களது தங்கம் விற்கப்படுவதால் கிடைக்கும் பணத்தைப் பெறுவதற்கு முடிய வேண்டும்.
    - வாடிக்கையாளர்களின் பணம் ஏதேனும் இருப்பின் அதை உடனடியாக திருப்பித் தரவேண்டும்.
- நிறுவனத்தின் செயல்பாட்டு அமைப்பு வாடிக்கையாளர்களின் தங்கம் மற்றும் பணத்தை ஒரு அறங்காவலருக்கு கணிசமான கட்டுப்பாட்டைக் கொடுத்தால், வாடிக்கையாளர்களின் தங்கம் மற்றும் பணத்தை அடையாளம் காணவும், பிரிக்கவும் மற்றும் விநியோகிக்கவும் சட்ட மற்றும் செயல்பாட்டுத் திறன் இருக்க வேண்டும்.

கூடுதலான மிகச்சிறந்த நடைமுறைகள்

22 போதிய அளவுக்கு பண மோசடி கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்கவும், சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவிக்கவும் நான் உறுதி கூறுகிறேன்.

- பணமோசடி சட்டவிதிகளைப் பின்பற்றுதல்.
- வாடிக்கையாளரின் பெயர்கள், ஆவணங்கள், அக்கவுண்ட்டுகள் ஆகியவற்றைத் துல்லியமாக பராமரித்து, உரிய முறையில் ஆவணங்களை பராமரித்து வைத்தல்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தல். தடை செய்யப்பட்ட வாடிக்கையாளர்களை (கண்டறியப்பட்டு, அரசினால் தெரிவிக்கப்படுமானால்) முதலீடு செய்ய விடாமல் கட்டுப்படுத்துங்கள்.

ஒரு உதாரணம்:

நான் பத்தாண்டுகளுக்கும் மேலாக தங்கத்தில் பிஸினஸ் செய்து வருகிறேன். தங்கத்தை ரீட்டெய்ல் முறையில் விற்பதற்காக டிஜிட்டல் முதலீட்டில் நுழைய விரும்புகிறேன். தங்கம் தொழிலில் உள்ள இடர்களைச் சமாளிக்கும் நடவடிக்கைகளை நான் புரிந்து கொண்டிருக்கும் வேளையில், உறுதியான இடர் கட்டுப்பாடு நடவடிக்கைகளை உருவாக்குவதில் நான் கவனம் செலுத்த வேண்டுமா?

ஏற்படக்கூடிய இடர்கள்:

புத்திசாலித்தனமாக வேலைகளை வெளியாருக்குத் தருதல், நம்பகமான ஐடி, தங்கத் தொழிலுடன் தொடர்புடைய இன்ஷ்யூரன்ஸ் கவர் போன்ற பல இடர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தாலும், பின்வரும் குறிப்பான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதும் முக்கியமாகும்.

